குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

# நிகழினி இதழ்

# NIGAZHINI MAGAZINE

பதிப்பாசிரியர் : திருமதி. சந்திரா ஸ்ரீதர்

இணை பதிப்பாசிரியர்:
திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்

பதிப்பு : 9/2025/2










குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

## குறிஞ்சி உறுதி மொழி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல்
தொன்மையான நம் தமிழ் மொழி,
தமிழ் கலாச்சாரம் மற்றும் தமிழ்ச் சமுதாயத்தில்
நானும் ஒரு அங்கமாக இருப்பதில்
பெருமைக் கொள்கிறேன்!
தமிழில் பேசவும்,
எழுதவும், படிக்கவும்
நான் என்றும்
முயற்சி செய்வேன் என்று
உறுதி எடுக்கிறேன்!
தமிழை வாசிப்போம்!
நேசிப்போம்!
சுவாசிப்போம்!
வணக்கம்!

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் பக்கம் | 2 |
| 2 | இணை ஆசிரியர் பக்கம் | 3 |
| 3 | திருக்குறள் | 4 |
| 4 | கண்ணதாசன் காவிய வரிகள் | 4 |
| 5 | நட்பு – தமிழர் பண்பாடு | 5 |
| 6 | நண்பர்களின் வகைகள் | 10 |
| 7 | கோலம் | 11 |
| 8 | நித்ய பஞ்சசுத்தி முறை | 12 |
| 9 | மதி | 13 |
| 10 | உண்மை வரிகள் | 14 |
| 11 | என் தமிழ் கிராமம் | 15 |
| 12 | வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்கள் | 16 |
| 13 | பொக்கிஷ வரிகள் | 16 |
| 14 | மௌன விதைகள் - நம் பயணம் | 17 |
| 15 | ஓவியம் | 18 |
| 16 | தீபாவளி விளக்கு | 18 |
| 17 | பாரதியார் பதிவிட்ட காதல் | 19 |
| 18 | மைந்தனின் மண்வாசனை மாறாதப் பழமொழி | 20 |
| 19 | அன்புதான் ஜெயிக்கும் | 20 |
| 20 | வார்த்தைகளை இணை | 21 |

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
| --- | --- | --- |
| 21 | முதல் எழுத்தை மாற்றி புதிய வார்த்தைகளை உருவாக்கு | 21 |
| 22 | வண்ணம் தீட்டி மகிழ்க | 22 |
| 23 | குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & குறிஞ்சி கல்விக்கூடம் -இரண்டாம் ஆண்டுவிழா | 23 |
| 24 | நிகழினி இதழின் பரிசு விவரம் | 27 |
| 25 | பெருமைக்குரிய தமிழர் விருது- வெற்றியாளர் 2025 | 28 |

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & கல்விக் கூடம்
Kurinji Muthamizh Sangam & Academy

**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

**Co-editor : Mrs. Dhivya Sankarasubramanian**
**இணை ஆசிரியர்:**
**திருமதி. திவ்யா சங்கரசுப்பிரமணியன்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
kurinjimuthamizhsangam@gmail.com

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, **"நிகழினி இதழ்"** தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயப்படைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கப்பட்டப் படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்லத் தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

## ஆசிரியர் பக்கம்

### தன்னம்பிக்கை வரிகள்

எதிரே நிற்கும் எதிரியையும் எதிர்த்து நிற்கும் வீரம் இருக்கும் போது, கண்ணுக்கு தெரியாத துன்பத்தை நினைத்து துவண்டு போவது ஏனோ!

கத்தி என்று தெரிந்தாலும் துணிந்து கால் வை. போராட்டம் என்று தெரிந்தாலும் துணிந்து போராடு. காலம் உன் கை பிடியில். வெற்றி உன் காலடியில்.

நம் இலக்கை நோக்கிய பயணத்தில், தடைகள் பல பிறக்கும். தடைகள் பல பிறந்தால், அதை உடைக்கும் வழிகள் பல உதிக்கும். புது திறமைகள் பல முளைக்கும். இலக்கை நோக்கி தொடர்ந்து செல். வெற்றி உன்னை தொடுவது உறுதி. நீ வெற்றியை முத்தமிடுவது உறுதி.

போராடி உயரும் வித்தையை உன் மனதுக்கு கற்பித்து பார். அது தரும் உத்வேகம், உன்னை கொண்டு செல்லும் வாழ்க்கையின் வெகு உயரம்.

பிறரை நம்புங்கள் உயர்வதற்கு, வாய்ப்புகளை நம்புங்கள் முயல்வதற்கு, சவால்களை நம்புங்கள் வளர்வதற்கு, உங்களை நம்புங்கள் வாழ்வதற்கு.

உன் கனவை நோக்கி செல்லும் போது, உன் கனவுக்கு உந்துதல் தரும் ஒரு வார்த்தை கிடைத்தாலும், அதை பெற்றுக் கொள். உன் கனவுகளை சிதைக்கும் ஆயிரம் வார்த்தைகள் வந்தாலும் அதை விட்டுத்தள்ளு.

பிறர் உருவாக்கிய பாதையில் வரும் வெற்றியை ருசிப்பதை விட, நீ உருவாக்கிய பாதையில் வரும் தோல்வியை ரசிப்பதையே விரும்பு.

இந்த உலகம் போராடி முன்னேற துடிப்பவன் முயற்சியை, முடக்க பல வழிகளில் முயற்சி செய்யும். ஆனால் இறுதியில் வெற்றி பெறுவது என்னமோ, போராடி முன்னேற துடிப்பவனின் முயற்சி தான்.



**உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம். மகிழ்ச்சியாக வாசியுங்கள்!**

இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்

# இணை ஆசிரியர் பக்கம்

## சித்திரை - தமிழ்ப் புத்தாண்டு

தமிழர்களால் தமிழ்ப் புத்தாண்டு என சித்திரை முதல் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.தமிழ்ப் புத்தாண்டு நாளான சித்திரை முதல் நாள் கனிகாணல் தமிழ்நாட்டின் மரபு.

கோவில்களிலும் வீடுகளிலும் கனிகளை அலங்கரித்து வைப்பர். வீடுகளில் பூஜையறையில் வாழை, கொய்யா, மாதுளை முதலிய கனிகளையும், பூக்கள், மஞ்சள், வெற்றிலைப் பாக்கு, பணம், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் அல்லது நாணயங்கள், கண்ணாடி என மங்களகரமானப் பொருட்களை வாழையிலை அல்லது தட்டில் வைத்து வருடப் பிறப்பு அன்று அதிகாலை குடும்பத்தினர் எழுந்து, கண்களைத் திறக்காமல் பூஜையறைக்குச் சென்று, முதல் நாள் வைத்த மங்களகரமானப் பொருட்களின் மேல் கண் விழித்து வணங்கிச் செல்வர்.இதை 'விஷு கனி' என்று கேரளாவிலும் தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும் அழைக்கின்றனர்.

தமிழ்ப் புத்தாண்டு அன்று கோவில்களிலும் வீடுகளிலும் பஞ்சாங்கம் வாசிப்பது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

சித்திரை முதல் பங்குனி வரை ஒவ்வொரு மாதமும் நமது முன்னோர்களால் வேளாண்மை மற்றும் கால நிலையைக் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது.

சித்திரை முதல் ஆனி வரையிலான காலம் இளவேனிற்காலம் என கருதப்படுகிறது.'சித்திரை பிறந்தது முருங்கை வேம்பு பூத்தது' என்பர்.சித்திரையில் வேப்பம்பூ பூப்பதால் தமிழ்ப் புத்தாண்டு அன்று மதிய உணவில் வேப்பம்பூ பச்சடி இடம்பெறும்.'சித்திரை பத்தில் சினந்த பெருங்காற்று' என்பர் நம் முன்னோர்.பத்து நாட்களுக்குப் பிறகு காற்று பலமாக இருக்கும் என்பதையே இது குறிக்கிறது.

சித்திரை மாதக் கடைசியில் அக்னி நட்சத்திரம் தொடங்கும். இந்நாட்களில் வெயில் மிகவும் கடுமையாக இருக்கும். இக்காலக்கட்டத்தில் சுப காரியங்கள் செய்வதைத் தவிர்ப்பர்.அது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

அக்னி நட்சத்திரக் காலத்தில் மழை பெய்வதை நம் முன்னோர்கள் கெட்ட சகுனமாகக் கருதினர்.இதற்குக் காரணம் இதனால் ஐப்பசியில் பெய்யும் மழையின் அளவு குறையும் என்பதே.

நெல் முதலான தானியங்களின் விதைகளைப் பதப்படுத்தி அடுத்த விளைச்சலுக்குச் சேமித்து வைப்பது , மலிவான பொருட்கள் வாங்கிப் பதப்படுத்தி வைப்பது என குளிர்சாதனப்பெட்டி இல்லாத காலத்திலும் நம் முன்னோர்கள் வெயிலில் காய வைத்து உபயோகப்படுத்த இந்த சித்திரை வெயிலைச் சாதகமாகப் பயன்படுத்தினர்.
விளை நிலங்களையும் இந்த மாதத்தில் பக்குவப்படுத்தி அடுத்த மகசூலுக்குத் தயார்ப்படுத்துவர்.

இம்மாதத்தில் வரும் சித்ரா பௌர்ணமி சிறப்பு வாய்ந்தது.மனிதரின் பாவ புண்ணிய கணக்குகளைப் பதிவு செய்து அவர்களின் கர்ம வினைப்பயன்களை வழங்க எமனுக்கு உதவும் 'சித்திரகுப்தரின்' பிறந்த நாளைக் கொண்டாடும் நாளே இந்த பௌர்ணமி என்றும் அந்நாளில் சித்திரகுப்தரை வணங்குவது நல்ல எண்ணங்களையும் இனி வாழ்வில் நல்ல செயல்களைச் செய்து புண்ணிய பலன்களைப் பெற அவர் அருளுவார் என்பதும் நம்பிக்கை.

சித்திரை என்றவுடன் நம் நினைவுக்கு வருவது இம்மாதத்தில் கொண்டாடப்படும் கோவில் திருவிழாக்களே.தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் தேரோட்டங்களும் திருவிழாக்களும் நடைபெறும்.மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவும், மீனாட்சி அம்மன் திருக்கல்யாணமும், கூவாகம் கூத்தாண்டவர் கோவில் திருவிழாவும் பிரசித்திப் பெற்றது.



இங்ஙனம்
**திவ்யா சங்கரசுப்பிரமணியன்**
இணை ஆசிரியர்

## திருக்குறள்




பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

பொருள் : அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர,ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இருக்க முடியாது.

**Meaning :** Humility with pleasant speech to man on earth, Is choice adornment; all besides is nothing worth

திருக்குறள் எண்: 95
பால்: அறத்துப்பால்
அதிகாரம்: இனியவை கூறல்

## கண்ணதாசன் காவிய வரிகள்




**கவிஞர் - கண்ணதாசன்**

# நட்பு ---- தமிழர் பண்பாடு

**திருமதி - ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்**



நிகழினியின் முந்தைய இதழ்களில் தமிழினத்தின் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றைப் பார்த்தோம் . அந்த வகையில் இந்த இதழில் நட்புப் பற்றிச் சில செய்திகளைப் பார்ப்போம் .

தமிழர் பண்பாட்டில் நட்பு என்பது மிகவும் போற்றத்தக்க ஒரு விடயமாகும். மானுடர் இருவர்க்கு இடையே ஏற்படும் தொடர்புகளில் மிகவும் பெருமை உடையதாகக் கருதப்படுவது நட்பு . சங்க காலத்திலிருந்தே தமிழர்கள் நட்பைப் பெரிதும் போற்றி வாழ்ந்தனர்.

திருவள்ளுவரும் நட்பு என்ற அதிகாரத்தில் 10 குறட்பாக்களில் நட்பின் சிறப்புப் பற்றித் துல்லியமாக எடுத்துரைக்கின்றார்.

## எது உண்மையான நட்பு ?

வாழ்க்கையில் நம்மோடு பழகுபவர்கள் எல்லாம் நமக்கு நண்பர்கள் ஆகிவிட மாட்டார்கள் . முக மலர்ச்சியோடு நம்மிடம் பேசுபவர்கள் எல்லாம் நல்ல நண்பர்கள் ஆகி விட மாட்டார்கள் . இரு நெஞ்சங்கள் ஒன்றுபட்டு மகிழும்படி பொருந்துகின்ற உறவு தான் உண்மையான நட்பு என்கிறார் வள்ளுவர் .

**"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு ." (குறள் 786)**

மனமொத்த இருவர் நண்பர்கள் ஆவதற்கு அவர்கள் ஒரே இடத்தில் குடியிருக்க வேண்டும் என்பதோ, அடிக்கடி ஒருவரை ஒருவர் பார்த்துப் பழகவேண்டும் என்பதோ அவசியமில்லை. இருவர் உள்ளமும் உணர்ச்சி யால் ஒன்றுபட்டால் அதுவே நட்பாகிய உரிமையை நல்கும் என்பார் வள்ளுவர்.

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதாம்**
**நட்பாம் கிழமை தரும் " (குறள் 785)**

என்பது தான் அந்தக் குறள் .

இந்தக் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர்கள் என்று சங்க காலத்தில் வாழ்ந்த கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பைக் கூறுவார்கள். அப்படி என்ன சிறப்பு அவர்கள் நட்பில்? பாண்டிய நாட்டில் பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்த புலவர் பிசிராந்தையார்.

சோழ நாட்டில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட கோப்பெருஞ் சோழனோடு சிறந்த நட்புக் கொண்டவர். ஒரு புவிவேந்தரும் , பாவேந்தரும் நண்பர்களாக இருப்பது ஒன்றும் புதிதல்ல . இவர்கள் நட்பின் சிறப்பு என்ன வெனில், இருவரும் உயிரோடு இருந்தவரையில் ஒருவரை யொருவர் நேரிலே பார்த்துப் பழகியவர்கள் அல்லர். ஒருவரைப் பற்றி ஒருவர் கேள்விப்பட்ட வகையிலேயே இருவரும் ஒருவர் மேல் ஒருவர் நட்புப் பாராட்டினர்.

ஒரு சமயம் கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து உயிர் துறக்க எண்ணினான். அப்போது தனக்குப் பக்கத்தில் தன் நண்பர் பிசிராந்தையாருக்கும் ஓர் இடம் ஒதுக்குமாறு பணித்தான். பிசிராந்தையாரும் ஏதோ ஓர் உள்ளுணர்வு தூண்டச் சோழனைப் பார்க்க வருகிறார். வடக்கிருந்து உயிர் விடத் துணிந்த நிலையிலும் பிசிராந்தையாரைப் பார்க்க ஏங்குகிறான் சோழன். அவன் மேற்கொண்டு இருக்கும் நோன்பு பற்றி ஏதும் அறியாமலே அவனைக் காண வேண்டும் என்ற அவாவுடன் அவனைத் தேடி வருகிறார் புலவர்.

ஆனால் அவர் வருவதற்குள் சோழன் இறந்துவிடுவதால், அவர்களது சந்திப்பு நிகழாமலே போகிறது. ஆனாலும் தமிழ் இலக்கியங்களில் நட்புக்கு இலக்கணமாக வாழ்ந்த அவர்கள் இருவர் பெயரும் சேர்த்தே உச்சரிக்கப்படுகின்றன .

இது போன்றே அதியமானும் ஔவையும் சிறந்த நண்பர்களாக இருந்தார்கள் என்றும், தனக்குக் கிடைத்த கிடைத்தற்கரிய அருநெல்லிக் கனியைத் தான் உண்ணாது ஔவையை உண்ணச் செய்து, ஔவையையும் தமிழையும் வாழ வைத்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்றும் புறநானூறு பகர்கின்றது.

## அக இலக்கியங்களில் நட்பு :

சங்க இலக்கியங்களில் அகம் சார்ந்த இலக்கியங்களில் இலக்கிய மாந்தர்கள் பெயர் சுட்டி அழைக்கப்படுவதில்லை. அன்பு வயப்பட்ட ஆண் பெண் இருவரையும் தலைவன் தலைவி எனக் குறிப்பிடுவது அக இலக்கிய மரபு. இவர்கள் பொது மக்களாகவோ, அரச குலத்தவராகவோ இருக்கலாம். இவர்களோடு நட்பாக இருக்கும் தோழன் தோழியரைப் பாங்கன் பாங்கி எனக் குறிப்பிடுகிறது.

தலைவன் தலைவி இடையேயான காதலை வழி நடத்தி, அதைத் திருமணம் வரை கொண்டு செல்வதில் பெரும் பங்கு வகிப்பவள் தோழியே ஆவாள். தன் தலைவியின் காதலுக்காகத் தலைவனிடம் போராடுபவள் தோழியே ஆவாள். திருமணத்துக்கு முன்னதான களவு ஒழுக்கம் ஊரார் போற்றுகின்ற கற்பு வாழ்வாக மலர்வதற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பவள் தோழி.

தலைவன் தலைவியின் வாழ்வு செவ்விய நெறியில் செல்ல வழிவகுப்பவள் தோழி . அன்பு , அறிவு, அறன் என்ற மூன்றையும் மனம், மொழி, செயல்களில் கொண்ட நட்பின் உருவமாகத் திகழ்பவள் தோழி .

## அற இலக்கியங்களில் நட்பு:

நாம் எத்துணையோ பேருடன் நட்புடன் பழகினாலும் பண்பு உடையவர்களுடனான நட்பு, படிக்கும் போதெல்லாம் மகிழ்ச்சி தரும் நூலின் இன்பம் போன்றது என்பார் வள்ளுவர்.

**"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு ." (குறள் 783)**

நல்ல நட்புடைய இருவரில் ஒருவர் ஒரு துன்பம் அடைந்தால் மற்றவர் அத்துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதித் தன்னால் இயன்ற உதவியை உடனே தாமதிக்காமல் செய்வார். இதை விளக்க வள்ளுவர் கூறும் உவமை மிகவும் சிறப்புடையது. ஒருவன் அணிந்திருக்கும் ஆடை அவிழ்ந்து நெகிழ்ந்து விழும்பொழுது, அதைச் சரி செய்வதற்காக எப்படி அவனுடைய கை விரைந்து சென்று உதவுகிறதோ அதுபோல் தன் நண்பனுக்குத் துன்பம் நேரிட்டால் உடனே சென்று உதவி செய்வது தான் நல்ல நட்புக்கு அடையாளம் என்கிறது வள்ளுவம்.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு " (குறள் 788)**

இந்த இரண்டு குறள்களில் சொல்லப்படும் உவமைகள் நம் வாழ்வில் அனுபவத்தில் அனைவரும் உணரும் செய்திகள்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் நட்பு , நட்பு ஆராய்தல் , பழைமை , தீநட்பு , கூடா நட்பு என்று நட்பின் பல வகைகளை ஆராய்கிறார்.

## இதிகாசங்களில் நட்பு:

## கர்ணனும் துரியோதனனும் :

கர்ணன் பிறப்பால் க்ஷத்திரியனாக ( குந்தி தேவியின் மகன் ) இருந்தாலும், ஒரு தேரோட்டி தம்பதியினரால் வளர்க்கப்பட்டதால் சூத – புத்திரன் என்றே அழைக்கப்பட்டான் . அருச்சுனனுக்கு இணையாகப் போர்க் கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்த போதிலும், ஒரு தேரோட்டி மகனாகவே அறியப்பட்ட கர்ணன், அரண்மனையில் பல்வேறு அரசகுமாரர்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் கலந்துகொள்ள முடியாமல் அவமானப்படுத்தப் பட்டான். பாண்டவர்களுக்கு எதிராக நின்ற துரியோதனன், கர்ணனின் திறமையை மதித்து, அவனைத் தன் நண்பனாக ஏற்றுக் கொண்டதோடு, தன் ஆட்சிக்கு உட்பட்ட அங்க தேசத்தின் அரசனாக்கிப் போட்டியில் கலந்துகொள்ள வைத்தான். துரியோதனன் கர்ணனிடம் கொண்டிருந்த நட்பு சுயநல நோக்கத்துடன் இருந்தாலும், கர்ணன் துரியோதனனுடன் கொண்டிருந்த நட்புக்கு உண்மையாகவே இருந்தான். பின்னாளில் தான் குந்தியின் மைந்தன் என்றும், பாண்டவர் ஐவருக்கும் மூத்த சகோதரன் என்றும் அறிந்த போதும் , துரியோதனனுடன் கொண்ட நட்புக்காகப் பாண்டவரகளுக்கு எதிரணியில் துரியோதனனுக்காகப் போரிட்டுத் தன் இன்னுயிர் ஈந்தான்.

## இராமன் — குகன் நட்பு :

இராமாயணத்தில் நல்ல நட்புக்குச் சான்றாக நிறைய நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் இராமர்—குகன் நட்பும் ஒன்று.

வேடர் தலைவனான குகனும், வானரத் தலைவனான சுக்ரீவனும், இராவணனின் சகோதரன் விபீடணனும் இராமபிரானுக்கு வனவாசத்தின்போது கிடைத்த மிக நெருங்கிய நண்பர்கள். இவர்களுள் இராமன் முதலில் சந்தித்து நட்புக் கொண்டது குகனுடன் தான் .

கங்கை ஆற்றின் கரையில் இருந்த சுருங்கிபேர புரம் என்ற பகுதியை ஆண்டு வந்த வேடர் தலைவன் குகன். அயோத்தியின் இளவரசரான இராமரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். ஆனால் அவரை நேரில் சந்தித்ததில்லை.

தசரதரின் ஆணையின்படி வனவாசம் மேற்கொண்ட இராம இலக்குவரும் சீதையும் கங்கைக் கரையில் அமைந்துள்ள தவப்பள்ளியில் தங்கினார்கள். இச்செய்தி யறிந்த குகன் இராமனைக் காணச் செல்கிறான்.

போகும்போது ஆழ்கடலில் கிடைத்த மீனையும், மலையுச்சியில் கிடைத்த தேனையும்  எடுத்துச் செல்கிறான். இதன்மூலம் குகன் இராமன் மேல் கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும், உயர்வையும் உணர்த்துகிறார் கம்பர் . குகன் கொண்டு வந்தது தேனும் மீனும் மட்டுமல்ல; உயர்ந்த அன்பினையும் கொண்டு வந்துள்ளான் என்பதனை உணர்ந்த இராமன் , " நீ அன்போடும் பக்தியோடும் கொண்டுவந்த தேனும் மீனும் மிகவும் அருமையானவை . அமுதத்தைக் காட்டிலும் சிறந்தவை.  இவை யெல்லாம் எம்மைப் போன்றவர் ஏற்கத்தக்கவையே .ஆதலால் நாம் அவற்றை இனிதாக உண்டவர் போல் ஆனோம் .” என்று குகனிடம் கூறினான் . குகனின் அன்பையும் அர்ப்பணிப்பு உணர்வையும் கண்ட இராமன் குகனிடம் ,” நீ என் உயிர் போன்றவன் ; என் தம்பி இலக்குவன் உனக்கும் தம்பி . என் மனைவி சீதை உனக்கு உறவினள் . உன்னைச் சந்திப்பதற்கு முன்னர் நாங்கள் உடன் பிறந்தார் நால்வராக இருந்தோம் . இப்போது உன்னோடு சேர்த்து உடன்பிறந்தவர்கள் ஐவர் ஆனோம் .” என்று கூறினான் .

இதுகாறும் நாம் பார்த்த இலக்கிய , இதிகாச நட்புகள் எல்லாம் நமக்கு எதை உணர்த்துகின்றன? நட்புக்கு அடிப்படை அன்பு தான். நட்புக்கு ஆண்டான் அடிமை என்ற வேறுபாடோ , ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வோ, முன்பின் பார்த்துப் பழகிய பழக்கமோ, ஆண் பெண் என்ற பாகுபாடோ தேவையில்லை. நட்பு என்பது சுயநலமற்ற அன்பு .நட்பும் உதவியும் பிரிக்க முடியாதவை . உதவியால் நட்பும் , நட்பால் உதவியும் தொடர்ந்து வருபவை . எந்த வித பிரதியுபகாரமும் எதிர்பாராமல் உதவி செய்தவர் நட்பை நாம் என்றும் போற்ற வேண்டும். அது என்றைக்கும் நமக்கு நன்மை தரும் .

நட்பை மதிப்போம் !
நட்பைக் கொண்டாடுவோம் !
நட்பால் உயர்வோம் !

# நண்பர்கள்

## திரு.சுகுமாறன் மாரியப்பன்



### இலைகள்:

வாழ்க்கையில் எளிதில் கிடைக்கும் நண்பர்கள். இவர்கள் உங்கள் வாழ்க்கைக்கு அழகையும் மகிழ்ச்சியையும் வழங்குபவர்கள், முக்கியமானவர்கள் தான். ஆனாலும் சில மரத்தின் இலைகள் பருவத்திற்கேற்ப மாறக்கூடியவர்கள். விலகுபவர்கள்.

### கிளைகள்:

இவர்கள் உங்கள் வாழ்வில் உறுதியான ஆதரவாளர்கள். உங்கள் நிலையான மனநிலைக்கு செல்வத்தையும், உற்சாகத்தையும் வழங்குவோர். ஆனால் வாழ்க்கை புயலில் முறியக் கூடிய நட்புகள் இவர்கள்.

### வேர்கள்:

இவர்கள் உங்கள் வாழ்க்கையின் அடித்தளமாக இருப்பவர்கள். இயல்பாக குறைவானவர்கள் ஆனால் பேராதாரமானவர்கள். உங்களுக்கோ, மற்றவர்களுக்கோ தெரியாதவர்கள். ஆனால் இவர்கள் எந்த சூழலிலும் உங்களுடன் இணைந்து, உங்களின் வளர்ச்சிக்கு உறுதியாக, ஆதாரமானவர்கள்.

வாழ்க்கை என்னும் மரத்திற்கு அழகு சேர்க்க இலைகள், மற்றும் கிளைகளும் தேவை தான். ஆனால் உங்களின் வேர்போன்ற நண்பர்களைப் பராமரித்திட மறந்துவிட கூடாது.

உண்மையான நட்பு உங்கள் வாழ்க்கையை உயிர்ப்பித்து வளமாக்கும். உங்களுடைய வேர் போன்ற நண்பர்கள் யார் ?

# இலைகளுக்காக வேர்களை இழக்காதீர்கள்!

பருவத்திற்கேற்ப நிறம் மாறி
உதிரக்கூடிய இலைகள்...

உறுதியானாலும் புயலுக்கு
உடையக்கூடிய கிளைகள்!

வெளியில் தெரியாமல்
ஆதாரமாக இருக்கும் வேர்கள்!


நம் நண்பர்களும் அப்படித்தான்,
பலர் இலைகளாகவும், கிளைகளாகவும்,
சிலர் வேர்களாகவும் இருப்பர்.

வாழ்க்கை எனும் மரம் வளர இலை, கிளைகள் முக்கியம் தான்

ஆனால் இலைகளுக்காக வேர்களை இழக்காதீர்கள்!

# கோலம்

கோலம் என்பதன் பொருள் அழகாக வரைதல் என்பதாகும். வீட்டு வாசலில் கோலமிடுவது வீட்டிற்கு லட்சுமி தெய்வத்தை வரவேற்பதாகும். இதனால் வீட்டில் செல்வச் செழிப்பைக் கொடுக்கும் என்றுக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் தினமும் பெண்கள் அதிகாலையில் எழுந்து சாணம் கலந்த தண்ணீரை வாசலில் தெளித்து, பின்னர் பச்சரிசி மாவில் கோலமிடுவர். இது தமிழகப் பெண்களுக்கு பெருமைச் சேர்க்கிறது. தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் பெண்கள் கோலம் போடும் கலையும் உள்ளது. கோலங்களைப் பார்க்கும் போது மகிழ்ச்சியும், உற்சாகமும் பிறக்கும். பச்சரிசி மாவில் கோலமிடுவதால் பல சிறிய உயிரினங்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. குறிப்பாக எறும்புகள் அதிக தூரம் செல்லாமல் கோலத்தில் உள்ள அரிசி மாவை உண்ணுகிறது.



# நித்ய பஞ்ச சுத்தி முறை

**திருமதி.ரேவதி சுகுமாறன்**



சமீபத்தில் புதின் சுரேஷ் எழுதிய சித்தர்களின் நித்ய பஞ்சசுத்தி முறை என்ற புத்தகத்தைப் படித்தேன். இந்த புத்தகம் நோய் மற்றும் மருந்து இல்லாத வாழ்க்கைக்கு எப்படிச் செல்வது என்பதுப் பற்றி சொல்கிறது. இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை சித்தர்கள் தங்கள் மருத்துவ நடைமுறைகளிலும் இலக்கியங்களிலும் குறிப்பிட்டுள்ளனர். இந்த புத்தகத்திலிருந்து நான் கற்றுக்கொண்டது

1) தினமும் செய்ய வேண்டிய ஐந்து சுத்தங்கள்.அவை தந்த சுத்தி, கப சுத்தி, குடல் சுத்தி, உடல் சுத்தி, நேத்திர சுத்தி என்று அழைக்கப்படுகின்றன

2) இந்த நடைமுறைகள் அனைத்தும் நம் உடலில் ரசாயனங்கள் நுழைவதைத் தவிர்க்க வலியுறுத்துகின்றன. எளிதான இயற்கை வைத்தியங்களை பரிந்துரைக்கின்றன.

3) குடல் சுத்தி - இனிமா கிட் பயன்படுத்தி நம் குடலை சுத்தம் செய்வது.

4) தந்த சுத்தி - கருவேலம்பொடி, கல் உப்பு போன்ற சில இயற்கை மருத்துவ பொடிகளைப் பயன்படுத்தி பல் துலக்குதல். எதுவும் கிடைக்கவிட்டால் கல் உப்பைப் பயன்படுத்தலாம். தூரிகைக்குப் பதிலாக உங்கள் விரலைப் பயன்படுத்தி பல் துலக்குங்கள். தூரிகையைப்(brush) பயன்படுத்துவது பற்களின் நரம்புகளை சேதப்படுத்தும்.

5) கப சுத்தி - சளியைச் சுத்தம் செய்ய நல்லெண்ணெயை வைத்து வாய் கொப்பளிக்கவும்.

6) நேத்திர சுத்தி - கண்களைக் குளிர்ச்சியாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு முறை கண்களில் ஈரமானத் துண்டை வைக்கவும்.

7) உடல் சுத்தி - சீயக்காய் அதிகம் உள்ள இயற்கை பொடிகளைப் பயன்படுத்தி தினமும் குளிக்கவும். முடியாவிட்டால் பச்சைப் பயறு மாவைப் பயன்படுத்தவும்.

இந்த நடைமுறைகளை தினமும் செய்வதன் மூலம், புற்றுநோய், நீரிழிவு, ஆஸ்துமா மற்றும் குணப்படுத்த முடியாதப் பல நோய்களிலிருந்து விடுபடலாம்.

# மதி

**திருமதி ப்ரீத்தி வெ ராமன்**



பாரதி தெளிவாகவும், திருத்தமாகவும் சொல்லி இருந்தாரு. யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று. இன்றும் பொருத்தமாக நிற்கும்,செம்மொழி தமிழ் என்பதில் ஐயமில்லை.
தமிழின் அழகு சொல்லப்படும் எண்ணங்களிலும், சொல்லப்படும் விஷயங்களின் அர்த்தத்திலும் இருக்கிறது என்பது நாம் அறிந்ததே. "மதி" (மதி) மூலம் அத்தகைய முயற்சியை நான் செய்துள்ளேன், அங்கு அதே சொல் (மதி) சூழலின் அடிப்படையில் வேறுபட்ட பொருளைக் குறிக்கிறது.

## மதி

அவள் கடைவிழியை பார்க்கையில்
மதிமயக்கம் அடைந்தது ஏனோ!
அவள் புலம்வருமிடத்தை தேடுகையில்
மதியும் மனமும் திகிரித்தது ஏனோ!
விதியின் பாணியில் மதி இயங்கியதில்
அவளின் ஆர்வலராக ஆனது ஏனோ !
மதிதிசை அவளை காணுகையில்
மகிழ்வி கொண்டது ஏனோ!
அவள் குரல் கேண்மதியில்
மனம் உறவாட சொன்னது ஏனோ!
அவள் உன்னை கண்டு புன்னகையில்
மதிமகனாக எண்ணியது ஏனோ !
நூண் மதியுடையவனாய் திகழ்கையில்
அவளை தேவதையாய் கண்டது ஏனோ !
அவள் கோடி வாக்கியங்கள் கேட்கையில்
மதியிலி ஆனது ஏனோ !
அவள் மாற்றான் மதியாக விரும்புகையில்
அவ்வியம் கொண்டது ஏனோ !
அவள் சிந்தனைகள் சித்தரிப்பில்
அவமதி அடைந்தது ஏனோ !

விதியை மதியால் வெல்ல எண்ணியதில்
சினம் அடைந்தது ஏனோ !
வானில் முழுமதியை ரசிக்கையில்
மீண்டும் அவளை மதிமானாக கண்டது ஏனோ!
மறவாத நெஞ்சமே !
மதியை வளர்த்து மதியை நாடிடு!

**- திருமதி ப்ரீத்தி வெ ராமன்**

## Glossary :

மதி - intellect, knowledge, perturbation, முழுமதி - full moon, மதியிலி- a fool, கேண்மதி - poetic expletive of imperatives hear , மதிதிசை - North point, மதிமகன் - son of moon , மதிமயக்கம் - foolishness, dulness, bewilderment அவமதி - dullness, disrespect, மதிமான் - The deer in the moon. மதிமயங்க - to be foolish, mad, out of one's wit.

## சொற்களஞ்சியம் :

மதி - புத்தி, அறிவு, குழப்பம், முழுமதி - பௌர்ணமி, மதியிலி- ஒரு முட்டாள், கேண்மதி - கவிதை வெளிப்பாடு கட்டாயங்கள் கேளுங்கள் , மதிதிசை - வடக்கு புள்ளி,
மதிமகன் - சந்திரன் மகன் , மதிமயக்கம் - முட்டாள்தனம், சோகம், திகைப்பு
அவமதி - மந்தம், அவமரியாதை, மதிமான் - நிலவில் மான். மதிமயங்க - முட்டாள்தனமாக, பைத்தியமாக, புத்திசாலித்தனமாக இருப்பது.
இவ்வாறாக மதி என்னும் ஒரு சொல் பல பொருள் தருகிறது

## உண்மை வரிகள்





# என் தமிழ் கிராமம்

- நிறங்களால் உயிரோட்டம் பெறட்டும்!



**நீங்கள் அறிந்தீர்களா?**


தமிழ் கிராமங்களில் அதிகாலை நேரம், வீடுகளின் முன் அழகான கோலங்களும், நாதஸ்வரத்தின் இனிய சப்தமும் ஆரம்பத்தின் அறிகுறியாக இருப்பது வழக்கம்! இது மகிழ்ச்சிக்கும், நல்வாழ்க்கைக்கும் அழைப்பாகக் கருதப்படுகிறது!

- **திருமதி. ப்ரீதி வாஸ்**



## வாய்மொழி இலக்கிய வகைகளின் பெயர்கள்

**செல்வி - யாழிசை சந்திரா ஸ்ரீதர்**




வாய் மொழி இலக்கிய வகைகளின் பெயர்கள் என்ன?

புராணக் கதைகள், தாலாட்டுப் பாடல்கள்
தெம்மாங்குப் பாடல்கள்
ஒப்பாரிப் பாடல்கள்
கும்மிப் பாடல்கள் போன்றவை வாய்மொழி இலக்கிய
வகையைச் சார்ந்தவை.

நன்றி!
யாழிசை சந்திரா ஸ்ரீதர்.

## பொக்கிஷ வரிகள்



திறந்த புத்தகமாக
சிலருடைய
வாழ்க்கை
இருந்தாலும்,
அதிலும் மௌனமாக
வாசிக்க வேண்டிய
பக்கங்கள் உண்டு.
-ஹர்ஷிவ் எல்லப்பா






**செல்வன் - ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்**

# மௌன விதைகள்

## திருமதி - வனதுர்கா வெங்கட்



சொல்லப்படாத வார்த்தைகளும்
மின்னலாய் தோன்றி
மறையும் எண்ணங்களும்
உனக்குள்
புதைந்து கிடக்கின்றன
விதைகளாக.

நம்பிக்கை நீரை ஊற்று
முயற்சியை உரமாக்கு
விதைகள் விருட்சமாகும் !!

**நோக்கம்:**
ஒவ்வொரு மனிதருக்கும், கனவுகள் விதைகளாக உள்ளத்தில் புதைந்து கிடக்கின்றன. அவை நனவாக, முயற்சி செய்ய வேண்டும்.

## *நம் பயணம் *

வாழும் போது
சுவாசிப்போம் சுதந்திரமாக,
இனபமாக கற்றுக்கொள்வோம்
நேசிக்கவும் ஏற்றுக்கொள்ளவும்.
சொர்க்கம் எங்கோ இல்லை,
நமக்குள் தான் இருக்கிறது.
நீங்கள் நடக்கும் பாதையை
நீங்கள் முடிவு செய்யுங்கள்,
சமூகத்தை கவனியுங்கள்
ஆனால் அடிமையாகாதீர்கள் .
இது நம் வாழ்க்கை
வாழ்வோம் ஆக்கப்பூர்வமாக,
உயிரும் உடலும் பிரிந்த
பின் நாம் யாரென
நாமே அறியமாட்டோம்.

# ஓவியம்

## செல்வி - ஆதிரா அருண் பிரசாத்







# தீபாவளி விளக்கு

## செல்வன்.ஜெகன் அருண் பிரசாத்





# பாரதியார் பதிவிட்ட காதல்


**திரு. ஸ்ரீதர் ராஜேந்திரன்**

காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.
இன்பம், இன்பம், இன்பம்;
இன்பத் திற்கோ ரெல்லை காணில்
துன்பம், துன்பம், துன்பம்.
நாதம், நாதம், நாதம்;
நாதத் தேயோர் நலிவுண் டாயின்
சேதம், சேதம், சேதம்.
தாளம், தாளம், தாளம்;
தாளத் திற்கோர் தடையுண் டாயின்
கூளம், கூளம், கூளம்.
பண்ணே, பண்ணே, பண்ணே;
பண்ணிற் கேயோர் பழுதுண் டாயின்
மண்ணே, மண்ணே, மண்ணே.
புகழே, புகழே, புகழே;
புகழுக் கேயோர் புரையுண் டாயின்
இகழே, இகழே, இகழே.

உறுதி, உறுதி, உறுதி;
உறுதிக் கேயோர் உடைவுண் டாயின்
இறுதி, இறுதி, இறுதி.
கூடல், கூடல், கூடல்;
கூடிப் பின்னே குமரன் போயின்
வாடல், வாடல், வாடல்.
குழலே, குழலே, குழலே;
குழலிற் கீறல் கூடுங் காலை
விழலே, விழலே, விழலே.

**–மகாகவி பாரதியார்.**


## மைந்தனின் மண்வாசனை மாறாதப் பழமொழி






**செல்வன்.ஹர்ஷித் கார்த்திகேயன்**

## அன்புதான் ஜெயிக்கும்



## வார்த்தைகளை இணை

| | | | | |
|---|---|---|---|---|
| வ | ஊ | வி | உ | எ |
| ளை | அ | ல் | ஐ | ஆ |
| டு | ஐ | ணு | ண் | வீ |
| வ | ம | றை | ஆ | ஐ |
| இ | வா | ழை | இ | ஈ |

வளை அணு வில் வடு
மறை வாழை வீண்

## முதல் எழுத்தை மாற்றி புதிய வார்த்தைகளை உருவாக்கு


### முதல் எழுத்தை மாற்றி எழுதுக

| | | | |
|---|---|---|---|
| காடு | | | |
| புல் | | | |
| கடை | | | |
| குயில் | | | |
| தட்டு | | | |

நாடு வடை கல் லட்டு ரயில்
நடை மயில் மாடு எட்டு வால்
பல் பாடு பட்டு வெயில் படை

# வண்ணம் தீட்டி மகிழ்க





# குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் & குறிஞ்சி கல்விக்கூடம் இரண்டாம் ஆண்டுவிழா

நிகழ்ச்சி தொகுப்பாளர்கள்:

1. நந்தினி மாணிக்கவேல்
2. ஆனி ஜோஷிலா பிரின்ஸ் லியோ
3. கலாவதி கிருஷ்ணா பிரசாத்

நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டு இனிதே தொடங்கியது.

குறிஞ்சி உறுதிமொழி- தன்னார்வலர்:
உறுதி மொழிக்கே உறுதியளிக்கும் உன்னதமான ஒரு இதயம்!
குறிஞ்சி உறுதிமொழியை, இனிமையாய் வாசித்த இனியா கோகுல் .

போல்டர் கொலோராடோ பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் குறிஞ்சி முத்தமிழ் சங்கம் உறுப்பினர்கள் நடத்திய இணையவழி தமிழ் வார்த்தை விளையாட்டு விமரிசையாக நடந்தது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் அளிக்கப்பட்டது.
போல்டர் கொலோராடோ பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் குறிஞ்சி முத்தமிழ் சங்கம் உறுப்பினர்களுக்கு நன்றி!

அரட்டை அரங்கம்

தலைப்பு: அமெரிக்காவில் வாழும் குழந்தைகள் தமிழராக வாழ்வதில் ஏற்படும் சவால்கள்
அன்பான குழந்தைகளின், அதிரவைத்த அரட்டை அரங்கம் அகிலத்தையே திரும்பி பார்க்க வைத்தது.

நடுவர்:

1. பத்மாராணி தினேஷ்

அவர்களின் தனிப்பட்ட முயற்சிகளே அணி:

1. மஹஷ்ரிதா
2. தீசனா ஸ்ரீகிருஷ்ணன்
3. ஹர்ஷிவ் எல்லப்பா சந்திரா ஸ்ரீதர்
4. கிருபன்யா சுரேஷ் பாபு

### சக நண்பர்களே அணி:

1. அம்ரிதா செல்லுக்கா தினேஷ்
2. அஸ்மிதா சங்கர்
3. ஸ்ருதி மகேஷ் குமார்
4. ஆத்விக் ராஜேஷ்

### பெற்றோர்களே அணி :

1. ஓம் மகேஷ் குமார்
2. மித்ரா பிரசாத்
3. தக்ஸ் ராகவேந்திரா கோகுல் கிரிதரன்
4. ஆதித்யா கண்மணி

### நம் சமூகமே அணி :

1. அன்வித் ராஜேஷ்
2. ருத்வமித்ரன் முருகானந்தம்
3. கவின் பிரவீன் பாபு
4. அதிதி முத்துக்குமார்
5. ஜெகன் அருண் பிரசாத்

### அவர்களின் தனிப்பட்ட முயற்சிகளே அணி :

1. கவிலயா கோகுலகிரிதரன்
2. அவந்திகா செல்லுக்கா தினேஷ்
3. இனியா கோகுல்

தெறிக்கவிடும் பேச்சு,தென்னாட்டு தமிழ் விதைகளின் மூச்சு, என வியக்க வைத்த வீரமான இளம் தமிழர்கள் பேசிய வார்த்தைகள், அரங்கத்தை அழகுபடுத்திய ஒரு நிகழ்ச்சியாக இருந்தது.

### திருக்குறள் தன்னார்வலர்:

திருவள்ளுவர் அளித்த அருமருந்து தான் திருக்குறள். அவர் குறளை, தன் குரலால் வசியப்படுத்திய விண்மீன்தான் யாழினி கண்மணி.

## வரவேற்புரை:

திருமதி நந்தினி மாணிக்கவேல் அவர்கள் வரவேற்புரை வழங்க நிகழ்ச்சி இனிதே தொடங்கியது.

## சிறப்பு விருந்தினர்கள்

சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த, Representative ஐக்கே பிலிப்ஸ் மற்றும் Meyor ஜான் குல்மான் அவர்கள், நம் கலாச்சாரம், நிகழ்வுகளை தெரிந்துக் கொள்வதில் ஆர்வம் காட்டிய விதம் பெருமகிழ்ச்சியை அளித்தது.

நாட்டுப்புறப் பாடல்களின் அணிகலன்களான, கோலாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் எனப் பல ஆட்டங்களின் பரிணாம வளர்ச்சியைக் கண்முன் கொண்டுவந்த காணக் குயில்கள்தான்,
மொட்டு ஆரம்ப நிலை மற்றும் உயர்நிலை மாணவர்கள்.

## கோலாட்டம்:

1. ஆதிரா அருண்பிரசாத்
2. சஹானா ராமகிருஷ்ணன்
3. அனன்யா மணிகண்டன்
4. சிந்து பிரசாத்

## ஒயிலாட்டம் :

1. ஆதிரா அருண் பிரசாத்
2. சஹானா ராமகிருஷ்ணன்
3. அனன்யா மணிகண்டன்
4. சிந்து பிரசாத்
5. சுகின் பிரவீன் பாபு
6. வருண் அரவிந்தன்
7. ஜெஸ் ஐடென் கில்பர்ட்
8. வினய் சுடலைமுத்து
9. கவின் குமரன் சுரேஷ் பாபு
10. ஜெய்டன் ஜான்
11. சாய் விக்னேஷ் ஜெய மகாராஜ்

**கரகாட்டம் :**

1. நித்திலா சுடலைமுத்து

**தப்பாட்டம் :**

1. சிந்து பிரசாத்
2. சுகின் பிரவீன் பாபு
3. வருண் அரவிந்தன்
4. ஜெஸ் ஐடென் கில்பர்ட்
5. வினய் சுடலைமுத்து
6. கவின் குமரன் சுரேஷ் பாபு
7. ஜெய்டன் ஜான்
8. சாய் விக்னேஷ் ஜெய மகாராஜ்

**புலியாட்டம் :**

1. சிந்து பிரசாத்

**இதுவரை பயணம் :**

குறிஞ்சி முத்தமிழ் சங்கம் நிர்வாக குழு முதன்மை உறுப்பினர் திரு.அருண் பிரசாத் ரெங்கசாமி அவர்கள் இச்சங்கத்தின் மற்றும் கல்விக்கூடத்தின் பணிகளையம், பயணத்தையும் மிக அழகாக எடுத்துரைத்தார்.

**தமிழ் சமூகத்தின் பெருமை விருது :**

தனி மனிதனாய் தழைத்து வாழும் ஒருசில மனிதருக்குதான் அந்த உண்மையும், உன்னதமும் சேரும்.அந்த வகையில் தமிழ் சமூகத்தின் பெருமை விருது, திரு.காட்வின் சகாயராஜ் வின்சென்ட் மற்றும் திருமதி.அணு மணவாளன் அவர்களுக்கும் கிடைத்ததில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

**நன்றியுரை:**

குறிஞ்சி முத்தமிழ் சங்கத்தின் முதன்மை உறுப்பினர் திரு.சுகுமாறன் மாரியப்பன் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவடைந்தது. நன்றி!

# நிகழினி இதழின் பரிசு விவரம்

கடந்த இதழில் அறிவித்ததைப் போலவே, நிகழினி நாளிதழின் சிறந்த 6 படைப்புகள்(சிறியவர்கள்-3,பெரியவர்கள்-3) தேர்ந்தெடுக்கப்பட்டு 25 டாலர்கள் மதிப்புள்ளப் பரிசு அட்டை வழங்கப்பட்டது.

**சிறந்த படைப்பாளர்கள் விவரம்:**

**சிறியவர்கள்:**

1. கனிஷ்கா சுகுமாறன்
2. ஹர்ஷித்
3. மேகலா வெங்கட்

**பெரியவர்கள் :**

1. அனுரேகா மோகன்
2. ப்ரீத்தி வே ராமன்
3. அம்பிகா அருண் பிரசாத்

# பெருமைக்குரிய தமிழர் விருது- வெற்றியாளர் 2025



## திரு. காட்வின் சகாயராஜ் வின்செண்ட்

**திரு. காட்வின் சகாயராஜ் வின்செண்ட்** அமேசானில் உள்ள AWS நிறுவனத்தில் மூத்த கட்டிடக் கலைஞராக உள்ளார். அவரது தொழில்முறை நிபுணத்துவம் மற்றும் அவரது தீவிர பரோபகாரத்திற்காகப் பெயர் பெற்றவர். அடுத்த தலைமுறையை மேம்படுத்துவதில் ஆர்வமுள்ள காட்வின், இளைஞர்களின் கல்வி மற்றும் தொழில் விருப்பங்களை அடைவதில் தீவிரமாக உதவுகிறார். அவரது முயற்சிகள் சிறந்த மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் IAS அதிகாரிகளை வளர்ப்பதற்கு பங்களித்துள்ளன. நிதி ரீதியாக பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த பெண்களுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட அவர். தனது நேரம், பணம் மற்றும் ஆற்றலை அவர்களின் கல்வியில் முதலீடு செய்கிறார். அவர்களுக்கு கிளவுட் திறன்களை வழங்குகிறார் மற்றும் அவர்களின் வேலைவாய்ப்பில் உதவுகிறார். கூடுதலாக, காட்வின் ஆதரவற்ற பெண்களுக்கு ஒரு வீட்டைக் கட்டுவதற்கு வளங்களை வெற்றிகரமாகத் திரட்டியுள்ளார். எண்ணற்ற இளைஞர்கள் தங்கள் கனவுகளை நனவாக்க உதவுவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

# பெருமைக்குரிய தமிழர் விருது- வெற்றியாளர் 2025



## திருமதி. அனௌ மணவாளன்

**திருமதி. அனௌ மணவாளன்** 29 வருட தொழில்நுட்ப அனுபவமுள்ள ஒரு புகழ்பெற்ற மூலோபாய மென்பொருள் பொறியியல் தலைவர் தற்போது பிராட்ரிட்ஜ் ஃபைனான்சியல் சொல்யூஷன்ஸில் மென்பொருள் பொறியியலின் துணைத் தலைவராக பணியாற்றும் அனௌ துணிகர மூலதன ஆலோசனைக் குழுவான ஸ்டீர் கோ மற்றும் பல இலாப நோக்கற்ற வாரியங்களின் செல்வாக்கு மிக்க உறுப்பினராக இருந்து வருகிறார். அர்ப்பணிப்புள்ள தொடர்ச்சியான கற்பவராக, அனௌ ஒரு ஊக்கமளிக்கும் பெண் தலைவராக உள்ளார். அவர் ஜெனரேட்டிவ் AI, இயந்திர கற்றல், பிளாக்செயின் மற்றும் பிட்காயின் உள்ளிட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்திருக்கிறார்.

அனௌவின் ஆர்வங்கள் சமூக சேவை மற்றும் கல்வியில் ஆழமாக வேரூன்றியுள்ளன. 15 ஆண்டுகளுக்கும் மேலாக குழந்தைகளு தமிழ் கற்பிப்பதில் அவர் உறுதியாக உள்ளார். அவரது முயற்சியான அரிச்சுவடி, தற்போது 175 குழந்தைகளுக்கு மொழி கற்றலை வளர்க்கிறது மற்றும் பல ஆண்டுகளாக பலருக்கு வெற்றிகரமாக பட்டம் வழங்கியுள்ளது. பல்வேறு இலாப நோக்கற்ற நிறுவனங்க மூலம் தொழில்நுட்பத் துறையில் பெண்கள் மற்றும் பெண்களின் அதிகாரமளிப்பையும் அனௌ ஆதரிக்கிறார் அவர் தனது நிறுவனத்திற்குள் ஒரு பெண்கள் தொழில்நுட்ப வளக் குழுவை நிறுவியுள்ளார் மற்றும் நிதி கல்வியறிவு, வீட்டு மேலாண்மை. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் பெண்களை ஆதரிக்கும் ஒரு முயற்சியான AIMM ஐ உருவாக்கியுள்ளார்.

**விழாதோரும் அழகை, உலா கொண்டுவரும் இன் கிரியேட் ஸ்டுடியோஸ் (Increate Studios) நிறுவனத்திற்கு நன்றி!**

**நிகழ்ச்சிகளில் புதுமை கொண்டுவரும், அழகிய புதுமைகள் பவித்ரா லக்ஷ்மி மனோகரன் மற்றும் ஸ்ருதி ராஜன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி!**

# INCREATE STUDIOS

*EVENT PLANNING, DECOR AND DESIGNS*

At Increate Studios, we craft unforgettable experiences by blending tradition with modern aesthetics. Rooted in culture yet designed for today, our bespoke event decor transforms spaces into stories. With creativity at our core, we curate magic tailored just for you.



**Contact us**

9495298797

increate studios

increate_events

increatestudios@gmail.com